தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.54/மா/2021

நாள்.22.12.2021

திரு A.N. சந்திரய்யன்,
சேலம் – முறையீட்டு மனுதாரர்

1)ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி

2)செயற்பொறியாளர்,
சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்கள்

3)சார் ஆய்வாளர்,
அஸ்தம்பட்டி மண்டலம்,
சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி, செவ்வாய்பேட்டை, 103, மாணிக்கம்பிள்ளை தெருவில் வசிக்கும் திரு A.N. சந்திரய்யன் என்பவரது 20.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.03.3021–ல் பெறப்பட்டு 54/2021 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாநகராட்சி, செவ்வாய்பேட்டை, 103, மாணிக்கம்பிள்ளை தெருவில் வசிக்கும் திரு.A.N.சந்திரய்யன் என்பவர் தனது 22.02.2021 நாளிட்ட மனுவில் :–

" a) Under settlement Doc.No. 488/1949, My father Sri. A.L.Nannier had given 174 cents of lands in Ratnasamy Puram, Salem to me and to my brother A.N.Rangaier.

b) We got the approval for layout from Salem Municipality and the Director of Town & Country Planning, Madras.

c) Under Doc.No.99/1967 the above lands were divided between me and my brother A.N. Rangaier on plots basis.

d) LL, HH, BB and DI, roads are to be formed by the Salem Municipality as per Ratnasamy puram scheme conditions.

e) Building plan was already prepared by me in my plots. But it cannot be submitted to Salem Municipal Corporation without above scheme roads. So many times, I requested The Salem Municipal Corporation in person and in letters for the past several years.

f) Due to non cooperation from the Salem Municipal Corporation, I approached Madras High Court for laying scheme roads. By S.M.C.

g) The Hon'ble High Court in its order No. W.P. 2565/2017 advised the Director of Town & Country Planning, Madras which in turn forward the direction to The Asst. Director, Town & Country Planning, Salem for further action.

h) Under registered letter dt. 28.06.2019 The Asst. Director, Country & Town Planning forwarded the order to The Salem Municipal Corporation.

i) Until now Salem Municipal Corporation had not formed the scheme roads. They have not sent the report to the District Collector, Salem for further action.

j) On 20.07.2018 I had already forwarded the High Court Order No.W.P. 2565/2017 to the Salem Municipal Corporation.

k) The High Court had given six months time for the formation of roads. Now more than 2 years passed. Even the report of road was not given to The Dist. Collector. The order of High Court must be honored by the Salem Municipal Corporation. "

2) மேலும் மனுதாரர் தனது 15.03.2021 நாளிட்ட மனுவில்

" A) W.P.No.27047 of 2011 of Madras High Court ordering RDO of Salem to give patta to me in 12 weeks time. But he failed to do.

B) W.P.No.25467 of 2017 of Madras High Court urging the Salem Thasildar to issue patta to me for the balance of lands in 4 weeks

time. He also disobeyed. Thasildar can easily escape by saying for non receipt of Salem Municipal surveyor report even though he has ample power to call for the report from The Salem Municipal Corporation Surveyor. But he kept silence.

C) The picture clearly points towards the surveyor who willfully ignored his duty to submit the true map and report of my lands in Ratnasamy Puram, Salem to the Thasildar. Further in collaboration with S.M.Thiagarajan he reduced the area at 8030 Sq.feet that belongs to me and to my brother A.N.Rangaier in the map dt. 12.04.2012, when the then Thasildar confirmed the total area at 174 cents on the basis of report of then surveyor of Salem Municipal Corporation. No sale of land or mortgage with others are made after 04.10.2010 by me and by A.N. Rangaier till this date

D) The Salem Municipal Corporation surveyor was requested to send correct report to the Salem Thasildar in letters dated 06.05.2019, 20.07.2019 and on 09.01.2020. But he refused to oblige. On 24.06.2019, I duly informed the Salem Commissioner in person to take steps but no result so far. But not only patta is due to me is being held up but also information of Ratnasamy Puram scheme road area was not informed to The Dist. Collector, Salem for action.

E) My building plan remains pending but cannot be submitted without road connection and patta. All these facts are being happened due to non cooperation of Salem Municipal Corporation. "

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையாளர், செயற்பொறியாளர், சேலம் மாநகராட்சி மற்றும் சார் ஆய்வாளர், அஸ்தம்பட்டி மண்டலம், சேலம் மாநகராட்சி ஆகியோரை 05.10.2021 அன்று விசாரணைகு ஆஜராகுமாறு 22.09.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) மனுதாரர் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 20.03.2021 நாளிட்ட எனது புகார் மனு தொடர்பாக இம்முறைமன்றத்தில் இன்று நேரடியாக ஆஜராகி, 05.10.2021 நாளிட்ட எனது எழுத்துப்பூர்வமான கடிதத்தையே இம்மன்றத்தின் முன் அளித்த வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது **05.10.2021** நாளிட்ட எழுத்துப்பூர்வமான கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

Today I had shown to you the followings:

i) Xerox of settlement deed No.488/1949
ii) Xerox of partition deed No.99/1967
iii) Xerox of letter dated 30.08.2021 addressed to Salem Thasildar.
iv) Xerox of TSR map dated 12.04.2012
v) Xerox of another map showing shortage of 8030 Sq.ft.
vi) Xerox of TSR map dated 03.09.2013
vii) Xerox of letter addressed to SMC Surveyor dated.20.07.2019 and E.E. on 27.02.2020
viii) Xerox of order of Thasildar in the year 2010
ix) Xerox of two letters to SMC, Commissioner dated 23.02.2019 and 24.06.2019.
x) Thiagarajan alongwith two others had purchased 4181 Sq.ft. of land in R.S.Puram in T.S. No.1065 which later changed T.S.No.3 and now remains in T.S.No.13 and 14 of which the Eastern boundary touches T.S.No.17/1` and TS 15 now. But in the related SMC map it runs in the middle of their land that shows clearly they had encroached 8030 Sq.ft. of land which runs west to East 27.01 F and 298 F in length from North to South from Salem Omalur road end upto Northern end of Shceme WH road.
xi) In the order dated 22.04.2013, The Honourable Madras High Court had given time of 12 weeks for granting patta. But cunningly the SMC Surveyor had reduced the area of 8030 Sq.ft. in the SMC TSR map dated 12.04.2012 and supported S.M.Thiagarajan to occupy that land of mine and A.N.Rangaiyer. Myself and A.N.Rangaiyer had not sold any land and not mortgaged to anybody after the year 2010. In my letter to SMC Surveyor, I had requested him to rectify the mistake done and restore the original map prevailed in the year 2010 otherwise he will have to face Sec.167 of Indian Penal Code 1860. No response from him till this date. Lot of money was spent for so many writ petitions in Madras High Court and I got mental agony due to misdeed of SMC

Surveyor who remains responsible, answerable and accountable and also SMC Commissioner too.

xii) In W.P.No.25467 of 2017 The Honourable Madras High Court had ordered the Salem Thasildar to give patta for my lands within 4 weeks time. Now more than 3 ½ years passed. Even at this stage the Thasildar can obey to the orbitration of High Court Order.

xiii) In W.P.No.2565/2017, the Honourable Madras High Court had ordered Salem Municipal Commissioner and the Executive Engineer to form the R.S.Puram scheme roads namely LL, HH, BB and DD roads within six months time. Even they had not reported road area to Salem Collector so far. I had requested them to do so. Now 3 years passed. They thus disobeyed to the order of High Court. Kindly set right things early.

5) சேலம் மாநகராட்சி செயற்பொறியாளர் மற்றும் அஸ்தம்பட்டி சார் ஆய்வாளர் ஆகிய இருவரும் 05.10.2021 அன்று விசாரணைக்கு இம்முறை மன்றத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்:

" மனுதாரர் தெரிவித்துள்ள LL, HH, DD ரோடு ஆகியவற்றில் நகர ஊரமைப்புத்துறை (சேலம் உள்ளூர் திட்டக்குழுமம்) திட்ட நிதியின் கீழ் மாநகராட்சியின் மூலம் புதியதாக சாலை ஏற்படுத்திட வேண்டியுள்ளார். உயர்நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் வட்டாட்சியரின் விசாரணை இறுதியாக்கம் செய்யப்பட்ட பின்னர் நடைமுறையில் உள்ள அரசு விதிகளுக்கு உட்பட்டு இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறை மன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறோம் " என்று தெரிவித்துள்ளனர்.

சேலம் மாவட்டம் சூரமங்கலம் வார்டுக்குட்பட்ட பெரியேரி கிராமம் இரத்தினசாமிபுரம் நகர புல எண் 194/2 மற்றும் 4/2 ஆகியவற்றில் உள்ள மனுதாரருக்கு சொந்தமான 1 ஏக்கர் 54 செண்ட் நிலத்தை அளவீடு செய்து தருமாறு மனுதாரர் மாநகராட்சியை வேண்டியிருந்தார். மனுதாரருடைய விண்ணப்பத்தின்படி அளவீடு செய்யப்பட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு விட்டது. எனினும், மனுதாரர் மறுபடியும் தனது நிலத்தை அளவீடு செய்து தருமாறு மாநகராட்சியை கேட்டுக்கொண்டுள்ளார். மேற்கண்டஇடத்தை மனுதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து உரிய நடைமுறைகளை பின்பற்றி வட்டாட்சியர் முன்னிலையில் மறு அளவீடு செய்து அத்தகவலை மனுதாரருக்கு தெரிவிக்கப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

6) ஆணையாளர், சேலம் மாநகராட்சி தனது 04.10.2021 நாளிட்ட கடிதத்தில் சேலம் மாவட்டம், செவ்வாய்பேட்டை, மாணிக்கம்பிள்ளை தெருவை சேர்ந்த திரு நன்னய்யர் என்பவருக்கு கிரயப்பத்திர எண்.488/1949–ன்படி 1 ஏக்கர் 74 சென்ட் பாத்தியப்பட்டு தனது சகோதரர் திரு A.N. ரங்கய்யர் அவருடன் பாகப்பிரிவினை பத்திர எண்.99/1967 நாள். 15.12.1967–ன்படி பாகப்பிரிவினை செய்யப்பட்டு அதில் தனது சகோதரர் திரு A.N. ரங்கய்யர் தனது பாகத்தின் ஒரு பகுதியை மற்றொருவருக்கு கிரயம் கொடுத்து விட்டதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் மேலும் வழக்கு எண். 25467/2017–ன்படி மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் சேலம் ஆகியோர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கில் ஒரு வாரத்தில் மனுதாரரின் கோரிக்கை மனுவினை பரிசீலனை செய்ய சேலம் வட்டாட்சியருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டதை நடைமுறைப்படுத்தக் கோரியும் மனுதாரரின் தந்தைக்கு பெரியேரி கிராமம் புல எண். 194/2–ல் 61 சென்ட் புல எண்.97–ல் 41 சென்ட் மற்றும் 72 சென்ட் ஆக மொத்தம் ஏக்கர் 1.72 சென்ட் நிலம் பாத்தியப்பட்டு அதன் பின்னர் அவருடைய மகன்கள் மனுதாரர் மற்றும் A.N. ரங்கய்யர் ஆகியோர் பாகப்பிரிவினைப் பத்திர எண்.99/1967 நாள் 15.12.1967–ன்படி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள்.

7) பெரியேரி கிராமம் Ward-D, Block-19, T.S.No.4/1. 3578 ச.அடி நகர புல எண்.4/2–ன் 1 ஏக்கர் 23472 ச. அடி ( 1 ஏக்கர் 54 சென்ட்) படி 1 ஏக்கர் 62 சென்ட்டுக்கு பழைய நகரளவைபடி மனுதாரரின் தந்தை நன்னய்யர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள்.

மறு நில அளவையில் Ward-AC, Block-19, T.S.No.16, பரப்பு 0.612.5 ச. மீ. நன்னய்யர் மக்கள் 1. A.N. சந்திரய்யர், 2.A.N. ரங்கய்யர் ஆகியோர் பெயரிலும் நகரபுல எண்.17 பரப்பு 0.0169.5 நன்னய்யர் மகன் 1. A.N. சந்திரய்யர், 2. பெருமாள் மனைவி நாகஜோதி ஆகியோர் பெயரிலும் நகர புர எண்.18 பரப்பு 0,5664,0 ச.மீட்டர், நன்னய்யர் மக்கள் 1. A.N. சந்திரய்யர் மற்றும் 2. A.N. ரங்கய்யர் ஆகியோர் பெயரிலும் பதிவாகியுள்ளது.

அதன் பின்னர் பராமரிப்பு பணியில் 16/1, 0.0117.5 ச.மீட்டர் நன்னய்யர் மக்கள் 1. A.N. சந்திரய்யர், 2. A.N. ரங்கய்யர் கிணறு பாகம் 16/2 0.0495.0 ச.மீ. நன்னய்யர் மகன் சந்திரய்யர் பெயரிலும 17/1, 0.0089.0 ச.மீ. நாகஜோதி பெயரிலும் வட்ட 8A/6/1418 நாள். 03.07.2008–ன்படியும், பிறகு 18/1A. 0.3206.0 ச,மீ. நன்னய்யர் மக்கள் 1. A.N. சந்திரய்யர், 2. A.N. ரங்கய்யர் பெயரிலும் 18/1பி 0.0088.0ச.மீ. திரு A.N. நன்னய்யர் மகன் திரு. A.N. சந்திரய்யர் பெயரில் வட்ட 8A/198/1416, நாள் 16.02.2007–ன்படி உட்பிரிவு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

8) இது தொடர்பாக மனுதாரர் திரு A.N. சந்திரய்யர், என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No. 25467/2017 நாள் 22.09.2017–ன்படி சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அதன்படி சேலம் வட்டாட்சியர் அவர்களிடம் ஒரு வாரத்திற்குள் மனு செய்து தீர்வு காணும் நீதிமன்ற அறிவுரைப்படி சேலம் வட்டாட்சியர் விசாரணை செய்து குறிப்பணை மூலம் மனுதாரர் திரு A.N. சந்திரய்யர் என்பவருக்கு 08.10.2018–ல் திரு A.N. சந்திரய்யர் மற்றும் A.N. ரங்கய்யர் என்பவர் பெயரில் கூட்டு பட்டா கோரப்பட்டுள்ளது எனவும், மேற்படி சாலையினை மாநகராட்சிக்கு தானமாக வழங்கிய பின்னர் நடவடிக்கை எடுக்க இயலும் என தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் சேலம் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

9) மேலும் மனுதாரர் 04.03.2021 தேதியில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். 5025/2021–ன்படி மாவட்ட ஆட்சியர், சர்வேயர், வட்டாட்சியர் உள்ளிட்டோர் மீது பழைய கிரயப்பத்திரபடி பட்டா வழங்ககோரி வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பின்படி விசாரணை தொடர்பாக நேரில் ஆஜராக மனுதாரர் திரு A.N. சந்திரயய்யர் என்பவருக்கு வட்டாட்சியர், சேலம் அவர்களால் 18.05.2021 மற்றும் 22.06.2021 ஆகிய இரண்டு முறை அழைப்பாணை வழங்கப்பட்டு விசாரணை தொடர் நடவடிக்கையில் உள்ளது.

10) மேலும் சேலம் மாநகராட்சி ஆணையர் தனது 14.12.2021 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட சாலையினை சீரமைக்கும் பணிக்காக நகர் ஊரமைப்புத்துறையினரால் நடவடிக்கை மேற்கொண்டு துறை ரீதியாக திட்ட மதிப்பீடு தயாரித்து நிதி வழங்கும்பட்சத்தில் மேற்காணும் “திட்ட சாலை” புதியதாக அமைக்க இயலும் என்பதையும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.5025/2021 வழங்கிய தீர்ப்புரை அடிப்படையில் வட்டாட்சியர், சேலம் அவர்கள் தலைமையில் நில அளவை மனுதாரர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டும், அதன் இறுதியாக்க உத்திரவு வரும் நிலையில் சாலை அமைப்பது குறித்து நடைமுறையில் உள்ள அரசு விதிகளுக்கு உட்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

11) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது வாக்குமூலம், சேலம் மாநகராட்சி செயற்பொறியாளர், அஸ்தம்பட்டி சார் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம், சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியப்பட்டுள்ளன: –

- முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் பிரதான கோரிக்கையாக புல எண் 15,16,17,18-ல் உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கவும் LL,HH,DD ரோடு ஆகியவற்றில் நகர ஊரமைப்புத்துறை திட்ட நிதியின் கீழ் மாநகராட்சியின் மூலம் புதிதாக சாலை ஏற்படுத்தவும் கோரியுள்ளார்.

- மனுதாரர் திரு. A.N. சந்திரய்யர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No. 25467/2017 நாள் 22.09.2017-ன்படி சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அதன்படி சேலம் வட்டாட்சியர் அவர்களிடம் ஒரு வாரத்திற்குள் மனு செய்து தீர்வு காணும் நீதிமன்ற அறிவுரைப்படி சேலம் வட்டாட்சியர் விசாரணை செய்து குறிப்பாணை மூலம், மனுதாரர் திரு. A.N.சந்திரய்யர் என்பவருக்கு 08.10.2018-ல் திரு. A.N. சந்திரய்யர் மற்றும் திரு. A.N. ரங்கய்யர் என்பவர் பெயரில் கூட்டு பட்டா கோரப்பட்டுள்ளது எனவும், மேற்படி சாலையினை மாநகராட்சிக்கு தானமாக வழங்கிய பின்னர் நடவடிக்கை எடுக்க இயலும் என்ற தகவல் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை சேலம் மாநகராட்சி ஆணையர் அறிக்கையிலிருந்து அறியமுடிகின்றது.

- மனுதாரர் தெரிவித்துள்ள, LL, HH, DD ரோடு ஆகியவை தனியர் பெயரிலும் இரத்தினசாமிபுரம் திட்ட அபிவிருத்தி சாலையாக நகர் ஊரமைப்புத்துறையினரால் ஏற்கனவே அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சாலையினை சீரமைக்கும் பணிக்காக நகர் ஊரமைப்புத்துறையினரால் நடவடிக்கை மேற்கொண்டு துறை ரீதியாக திட்ட மதிப்பீடு தயாரித்து நிதி வழங்கும்பட்சத்தில் மேற்காணும் "திட்ட சாலை" புதியதாக அமைக்க இயலும் என்பதையும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P. No.5025/2021 வழங்கிய தீர்ப்புரை அடிப்படையில் வட்டாட்சியர், சேலம் அவர்கள் தலைமையில் நில அளவை மனுதாரர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டும், அதன் இறுதியாக்க உத்திரவு வரும் நிலையில் சாலை அமைப்பது குறித்து நடைமுறையில் உள்ள அரசு விதிகளுக்கு உட்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

- மனுதாரர் பல ஆண்டுகளாக இந்நிகழ்வு தொடர்பாக போராடிக்கொண்டுள்ளதை அறியமுடிகின்றது.

- முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் பிரதான கோரிக்கையாக புல எண் 15,16,17,18–ல் உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கவும் LL,HH,DD ரோடு ஆகியவற்றில் நகர ஊரமைப்புத்துறை திட்ட நிதியின் கீழ் மாநகராட்சியின் மூலம் புதிதாக சாலை ஏற்படுத்தவும் கோரியுள்ளார்.

- மனுதாரர் திரு. A.N. சந்திரய்யர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No. 25467/2017 நாள் 22.09.2017–ன்படி சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அதன்படி சேலம் வடடாட்சியர் அவர்களிடம் ஒரு வாரத்திற்குள் மனு செய்து தீர்வு காணும் நீதிமன்ற அறிவுரைப்படி சேலம் வட்டாட்சியர் விசாரணை செய்து குறிப்பாணை மூலம், மனுதாரர் திரு. A.N.சந்திரய்யர் என்பவருக்கு 08.10.2018–ல் திரு. A.N. சந்திரய்யர் மற்றும் திரு. A.N. ரங்கய்யர் என்பவர் பெயரில் கூட்டு பட்டா கோரப்பட்டுள்ளது எனவும், மேற்படி சாலையினை மாநகராட்சிக்கு தானமாக வழங்கிய பின்னர் நடவடிக்கை எடுக்க இயலும் என்ற தகவல் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை சேலம் மாநகராட்சி ஆணையர் அறிக்கையிலிருந்து அறியமுடிகின்றது.

- மனுதாரர் தெரிவித்துள்ள, LL, HH, DD ரோடு ஆகியவை தனியார் பெயரிலும் இரத்தினசாமிபுரம் திட்ட அபிவிருத்தி சாலையாக நகர் ஊரமைப்புத்துறையினரால் ஏற்கனவே அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சாலையினை சீரமைக்கும் பணிக்காக நகர் ஊரமைப்புத்துறையினரால் நடவடிக்கை மேற்கொண்டு துறை ரீதியாக திட்ட மதிப்பீடு தயாரித்து நிதி வழங்கும்பட்சத்தில் மேற்காணும் “திட்ட சாலை” புதியதாக அமைக்க இயலும் என்பதையும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P. No.5025/2021 வழங்கிய தீர்ப்புரை அடிப்படையில் வட்டாட்சியர், சேலம் அவர்கள் தலைமையில் நில அளவை மனுதாரர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டும், அதன் இறுதியாக்க உத்திரவு வரும் நிலையில் சாலை அமைப்பது குறித்து நடைமுறையில் உள்ள அரசு விதிகளுக்கு உட்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

- மனுதாரர் பல ஆண்டுகளாக இந்நிகழ்வு தொடர்பாக போராடிக்கொண்டுள்ளதை அறியமுடிகின்றது.

- இந்நேர்வில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்கள் அடிப்படையில் உரிய விதிகளின்படி துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

12) எனவே இனியும் காலம் தாழ்த்தாமல் அரசு விதிகளுக்கு உட்பட்டு மனுதாரரின் கோரிக்கைகளை களைய உரிய துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் சேலம் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

13) மனுதாரர் புகார் ஏற்படுத்திய நிலஅளவையருக்குப் பதிலாக வேறொரு அளவையரை கொண்டு குறிப்பிட்ட நிலத்தை அளந்து விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2021–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. A.N. சந்திரய்யன்,
103, மாணிக்கம்பிள்ளை தெரு,
செவ்வாய்பேட்டை,
சேலம் – 636 002.

ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

செயற்பொறியாளர்.
சேலம் மாநகராட்சி,
சேலம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்